செய்தி வெளியீடு எண்: 65 நாள்:14.05.2021

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களை இன்று (14.05.2021) தலைமைச் செயலகத்தில், தூத்துக்குடியில் 22.05.2018 அன்று ஸ்டெர்லைட் தாமிர உருக்காலையை நிரந்தரமாக மூடக்கோரி நடத்தப்பட்ட போராட்டத்தின் போது, ஏற்பட்ட வன்முறையின் காரணமாக பொதுமக்களுக்கு ஏற்பட்ட உயிரிழப்பு, காயங்கள் குறித்தும், பொது மற்றும் தனியார் சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேதங்கள் குறித்தும் விசாரிப்பதற்காக தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்ட விசாரணை ஆணையத்தின் தலைவர் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதியரசர் திருமதி அருணா ஜெகதீசன் அவர்கள் சந்தித்து இடைக்கால அறிக்கையை சமர்ப்பித்தார்.

மேலும், கொரோனா நோய்த் தடுப்பு மற்றும் நிவாரணப் பணிகளுக்காக தமிழ்நாடு முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கு, 50,000/– ரூபாய் காசோலையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் ஓய்வுபெற்ற நீதியரசர் திருமதி அருணா ஜெகதீசன் அவர்கள் வழங்கினார்.

****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9